## பேச்சு – பிரிவு 7

# யாழ் நூல்

பேராசிரியர் சுவாமி விபுலாநந்தரால் ஆராய்ந்து எழுதப்பட்ட இசைத்தமிழ் களஞ்சியமே யாழ் நூல் ஆகும். இலங்கையில் மட்டக்களப்புக் காரரைதீவு என்னும் சைவத் தமிழ்ப் பழம்பதியில் முத்தமிழ் வித்தகர் எனப் போற்றப்படும் சுவாமி விபுலாநந்தர் 1892ஆம் ஆண்டிலே தோன்றினார். அவர் பண்டைத் தமிழரின் இசைத் தமிழ் பற்றிப் பலவருடங்களாக மேற்கொண்ட ஆய்வின் பயனாக ஆக்கம் பெற்றதே யாழ் நூலாகும்.

இந்நூல் பண்டைத்தமிழர் வாழ்வில் பயன்படுத்தப்பட்ட பல்வேறு வகையான யாழ்கள், தமிழர் வழங்கிய பண்ணிசை என்பன பற்றிப் பல்வேறு அரிய தகவல்களைக் கொண்டுள்ளது. .யாழ் இசைக்கருவிகள் பற்றிய செய்திகள், சங்க இலக்கியங்களிலும், சிலப்பதிகாரத்திலும், தேவாரங்களிலும் ஆழ்வார் பாடல்களிலும் இடம்பெற்றுள்ளன. அவ்வாறு இடம்பெற்றுவந்த பல்வேறு யாழ் இசைக்கருவிகள் இடைக் காலத்தில் பேணுவாரின்றி, வழக்கற்று மறைந்து போய்விட்டன.

இவ்வாறாக மறைந்து போன பண்டைத் தமிழரின் யாழ்கள் பற்றிய ஆராய்ச்சியில் சுவாமி விபுலாநந்தர் ஈடுபட்டார். அம்முயற்சிக்குப் பல்வேறு காரணிகள் பின்புலமாகவும், தூண்டுதல் களாகவும் அமையலாயின. சுவாமிகள் பிறந்த காரைதீவில் அமைந்துள்ள கண்ணகையம்மன் ஆலயத்தில் ஆண்டுதோறும் வைகாசித் திங்களில் நடைபெறும் சடங்குகளில் உடுக்கு வாசித்து பாடப்படும் கண்ணகி வழக்குரைப் பாடல்கள், உடுக்குச் சிந்துப் பாடல்கள் ஆகியனவற்றில் அவருக்கு அதீத ஈடுபாடு இருந்தது. அத்துடன் அவ்வூரில் ஆடப்பட்டுவந்த கூத்து இசைமரபும் சுவாமிகளைப் பெரிதும் இசையின்பாற் கவர்ந்திருந்தது.

அவற்றின் பின்னணியில் தமிழிசை ஆய்வில் சுவாமிகள் ஈடுபடலானார். இசைத்தமிழ் ஆய்வுக்குத் துணையாக அவர் பெற்றிருந்த தமிழ் இலக்கியப் பயிற்சியும், வடமொழி, இலத்தீன், ஆங்கிலம் முதலிய பன்மொழிப் புலமையும், கணிதம், பௌதிகம் சார்ந்த நுண்ணறிவும், சங்கீத அறிவும் உறுதுணையாக அமைந்தன. குறிப்பாகச் சங்கத் தமிழ் பற்றிய நுண்ணறிவும், சிலப்பதிகாரம், குடுமியாமலை இசைக்கல்வெட்டு என்பனவும் இசைத்தமிழ் ஆய்வுக்கு வழி வகுத்தன.

சுவாமி விபுலாநந்தர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே தமிழ்ப் பேராசிரியராக பணியாற்றிய காலத்தில், அங்கு அமைந்திருந்த இசைக்கல்லூரியின் மேற்பார்வையாளராகவும் கடமையாற்றி னார். அப்போது அங்கே இசை விரிவுரையாளராகக் கடமையாற்றிய சங்கீதகலாநிதி பொன்னையாபிள்ளையிடம் தமிழிசை அறிவையும் துல்லியமாகச் சுவாமிகள் பெற்றுக்கொண்டார்.

மேற்கூறிய இசைசார்ந்த தரவுகள், தமிழிசை பற்றிய நுண்ணறிவு என்பவனவற்றுடன், சுவாமிகள் இந்தியாவின் பலவிடங்களுக்கும் சென்று வழக்கற்றுப்போன தமிழர் இசைக்கருவிகள் பற்றிய தகவல்களைத் திரட்டினார். தனது ஆய்வில் பண்டைத் தமிழரின் கலைச் செல்வமான யாழ் வகைகளைக் கண்டறிந்தார். அவற்றை வில்யாழ், பேரியாழ், மகரயாழ், சீறியாழ், செங்கோட்டியாழ், சகோடயாழ் எனவகைப்படுத்தி, அவற்றின் உருவங்களையும் தானே வடிவமைத்தார்.

சுவாமிகள் யாழ் ஆராய்ச்சியின் போது சிறிது காலம் அண்ணாமலைப் பல்கலைக்கழக நிறுவுநர் சிதம்பரம் செட்டியாருக்குச் சொந்தமான, இலங்கையில் நுவரலியாவில்,றொசல்லை உவூட்ஸ்றொக் தோட்டத்தில் அமைந்திருந்த விடுதியில் தங்கியிருந்து, யாழ் இசை ஆராய்ச்சியில் முழுமையாக ஈடுபட்டு யாழ் நூலை எழுதி நிறைவு செய்தார்.

யாழ் நூலிற், பாயிரஇயல், யாழ் உறுப்பியல், இசைநரம்பியல், பாலைத்திரிபியல், பண்இயல், தேவாரஇயல், ஒழிபியல் என ஏழு இயல்கள் அமைந்துள்ளன. சுவாமிகளின் அரும்பெரும் முயற்சியினால் உருவான யாழ் நூல், கரந்தைத்தமிழ்ச் சங்கத்தாற் பதிப்பிக்கப்பட்டது. அந்நூல் 1947ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5ஆம், 6ஆம் திகதிகளிலே திருக்கொளம்புத்தூர் ஆவுடையார் திருக்கோவில் முன்றலில் புலவர் அவையில்,அரங்கேற்றம் செய்யப்பட்டது. சுவாமி விபுலாநந்தரின் இசையறிவின் செயல் நுட்பத்தால் உருவாக்கப்பட்ட யாழ்கள் ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு யாழ் நூல் அரங்கேற்றமேடையில் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. தமிழிசை ஆய்வுத்துறையில் அரும்பெரும் களஞ்சியமாகத் திகழும் யாழ் நூல் இதுவரை மூன்று தடவைகள் மீள்பதிப்புச் செய்யப்பட்டுள்ளது என்பதும் அதன் சிறப்பைப் புலப்படுத்துவதாகும்.

தமிழர் பண்பாட்டின் மகிமையை வெளிப்படுத்தும் யாழ் வகைகள்,அவற்றின் பயன்பாடு, பண்ணிசை விளக்கங்கள் முதலியவற்றைக் கொண்டமைந்துள்ள யாழ் நூலைப் படைத்த சுவாமி விபுலாநந்தரின் புகழ் என்றென்னும் நிலைத்திருக்கவேண்டும் என வாழ்த்துவோம்.

நன்றி. வணக்கம்.